தினமணி

## தொடர்மழையால் 1,000 ஏக்கரில் தக்காளி, பீன்ஸ், அவரை, பருத்தி சேதம்

First Published : 21 Nov 2010 10:30:30 AM IST

தருமபுரி, நவ. 20: தொடர்மழையால் தருமபுரி அருகேயுள்ள அதகபாடி மற்றும் சுற்றுப் பகுதி கிராமங்களில் ஆயிரம் ஏக்கருக்கு மேல் பயிரிடப்பட்டிருந்த தக்காளி, பீன்ஸ், அவரை, பருத்தி ஆகியவை அழுகி சேதமானது.

அதகபாடி, மாசியம்பட்டி, சின்னகாம்பட்டி, சின்னதடங்கம், செந்தில்நகர், சிவசுப்ரமணியநகர், குயிலாந்தோப்பு, அதியமான் நகர், ஜக்காரப்பட்டி மற்றும் சுற்றுப் பகுதி கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் தக்காளி, பீன்ஸ், அவரை மற்றும் பருதி பயிரிடப்பட்டிருந்தது.

வடகிழக்கு பருவமழையால் கடந்த சில நாட்களாக தருமபுரி மாவட்டம் முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. இதனால் அதகபாடி சுற்று வட்டார வயல்களில் தண்ணீர் தேங்கியது. இதில் பயிர்கள் அனைத்தும் மூழ்கியதால் விளைச்சல் அனைத்தும் சேதமானது. தக்காளி, பீன்ஸ், அவரை ஆகியவை அழுகின. பருத்தியும் மழையில் முழுவதுமாக நனைந்து சேதமானது.

தக்காளி பயிரிட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரத்துக்கும் மேல் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதர விவசாயிகளும் மகசூல் இழப்பால் நஷ்டமடைந்துள்ளனர்.

இதுகுறித்து அதகபாடியைச் சேர்ந்த விவசாயி கே. நடராஜன் கூறியது:

தொடர்மழையால் சுற்றுப் பகுதி கிராமங்களில் உள்ள 500-க்கும் மேற்பட்ட விவசாயிகளின் விளைநிலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. மழைநீர் வடிந்தோட போதிய வடிகால் வசதி ஏற்படுத்தாத காரணத்தினாலேயே தண்ணீர் தேங்கி பயிர்கள் சேதமாகின.

உள்ளாட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்தும் தண்ணீரை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. சேதப் பகுதியை வேளாண்மைத்துறையினர் பார்வையிட்டு உரிய இழப்பீடு வழங்க ஆவண செய்ய வேண்டும் என்றார்.

மழையால் தக்காளி அழுகுவதால் உரிய விலை கிடைக்காமல் குப்பைகளில் கொட்டும் நிலையும் உள்ளது. பென்னாகரம் சாலை, கிருஷ்ணகிரி மாவட்டம், ராயக்கோட்டை தக்காளி சந்தை ஆகிய பகுதிகளில் உள்ள குப்பைகளில் தக்காளி பழங்கள் குவியல், குவியலாக கொட்டப்பட்டுள்ளன.

## விவசாயிகளுக்கு உற்ற நண்பன் கூட்டுறவு இயக்கம்

First Published : 21 Nov 2010 10:42:10 AM IST

திருவாரூர், நவ. 20: விவசாயிகளுக்கு உற்ற நண்பனாக செயல்பட்டு வருகிறது கூட்டுறவு இயக்கம் என்றார் மாநில பால் வளத் துறை அமைச்சர் உ. மதிவாணன்.

திருவாரூர் மாவட்ட கூட்டுறவுத் துறை சார்பில் 57-வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் சிறந்த கூட்டுறவு நிறுவனங்களுக்கு கேடயங்களை வழங்கி அமைச்சர் உ. மதிவாணன் பேசியது:

ஏழை, எளிய மக்களுக்கான திட்டங்களை அரசு அறிவித்து செயல்படுத்தி வருகிறது. விவசாய பயன் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் ரூ.7,000 கோடி கடனை தள்ளுபடி செய்தவர் தமிழக முதல்வர் கருணாநிதி.

இதைத்தொடர்ந்து, மீண்டும் கடன் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு பயிர்கடனுக்கான வட்டி குறைப்பு, குறித்த காலத்தில் திரும்பச் செலுத்தினால் வட்டியில்லா கடன் ஆகியவற்றையும் அரசு வழங்கி வருகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் கிடைக்கும் பலன்களை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் மதிவாணன்.

விழாவுக்கு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமை வகித்தார். தஞ்சை கூட்டுறவு விற்பனை இணைய தனி அலுவலர் மா. சந்தானம், மண்டல இணைப்பதிவாளர் வி.எம். சந்திரசேகரன், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ஆர். பிருந்தா, நகர்மன்ற துணைத் தலைவர் ஆர். சங்கர், திருவாரூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் மு. சவுந்தரராஜன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

திருவாரூர் சரக கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் வெ. முனிராஜன் நன்றி கூறினார்.

**"திராட்சை விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்'**

First Published : 21 Nov 2010 11:35:25 AM IST

கம்பம், நவ. 20:திராட்சை விவசாயிகள் நவீன தொழில்நுட்பத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தேனி மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் அறிவுறுத்தினார்.

கம்பம் அருகே உள்ள காமயகவுண்டன்பட்டியில் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறையின் சார்பில் திராட்சை விவசாயிகள் கருத்தரங்கம் நடைபெற்றது. தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் சி.முருகன் வரவேற்புரையாற்றினார். சட்டப் பேரவை உறுப்பினர் என்.ராமகிருஷ்ணன், வேளாண்மை விற்பனை வாரியத் தலைவர் டி.கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் ப.முருகேசபூபதி சிறப்புரையாற்றினார். பூனாவைச் சேர்ந்த முதன்மை விஞ்ஞானிகள் எஸ்.டி.சாவந்த், எஸ்.டி.ராம்டெக், ஆராய்ச்சியாளர் வி.பொன்ராஜ், பென் அமைப்பின் நிர்வாக அலுவலர் சி.பழனியப்பன் ஆகியோர் திராட்சை சாகுபடியில் மேற்கொள்ளப்படும் புதிய தொழில்நுட்பங்கள் குறித்துப் பேசினர்.

கம்பம் பள்ளத்தாக்கு திராட்சை விவசாயிகள் கூட்டமைப்புத் தலைவர் எஸ்.முருகேஸ்பாபு தலைமையில் விவசாயிகளின் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

கருத்தரங்கிற்கு தலைமை வகித்து மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் பேசியதாவது:கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் 2,500 ஹெக்டர் திராட்சை பயிரிடப்பட்டு வருகிறது. இங்கு நல்ல விளைச்சல் இருந்தும் உரிய விலை கிடைக்கவில்லை. திராட்சை விவசாயிகள், நவீன தொழில்நுட்பத்தை பின்பற்ற முன்வர வேண்டும்.

இங்குள்ள விவசாயிகள் ஆண்டுக்கு 3 முறை அறுவடை செய்தும், ஒரு ஏக்கருக்கு 2 லட்சம் ரூபாய் கூட கிடைக்கவில்லை. ஆனால் மகாராஷ்டிரத்தில் ஆண்டுக்கு ஒரு முறை அல்லது 2 முறை மட்டுமே அறுவடை செய்து சுமார் 6 லட்சம் ரூபாய் வரை விவசாயிகள் வருமானம் ஈட்டுகின்றனர். எனவே, மகராஷ்டிரத்தில் உள்ள தொழில் நுட்பத்தை தேனி விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். கோவை வேளாண்மைப் பல்கலைக்கழக இளம் விஞ்ஞானிகள் திராட்சை விவசாயத்தை மேம்படுத்துவது குறித்து தேனியில் ஆராய்ச்சி மேற்கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

முன்னதாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணை வேந்தர் ப.முருகேசபூபதி, மாவட்ட ஆட்சியர் பூ.முத்துவீரன் ஆகியோர் திராட்சைத் தோட்டங்களைப் பார்வையிட்டு விவசாயிகளுடன் கலந்துரையாடினர்.

**அனக்காவூரில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு**

First Published : 21 Nov 2010 12:54:56 PM IST

செய்யாறு,நவ. 20: அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் சார்பில் அனக்காவூர் ஊராட்சி ஒன்றியத்தில் மீன் குஞ்சுகள் வளர்ப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

வடதின்னலூர், பழஞ்சூர், தென்தண்டலம், அனப்பத்தூர், காரணை கீழாத்தூர், புரிசை, வெள்ளை, செய்யாற்றைவென்றான் ஆகிய ஊராட்சிகளில் குளம் மற்றும் ஏரிகளில் மீன்குஞ்சுகள் விடும் பணி நடைபெற்று வருகின்றன.

வெள்ளை, செய்யாற்றைவென்றான் ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்று வரும் மீன் குஞ்சுகள் வளர்ப்பு பணிகளை வட்டார வளர்ச்சி அலுவலர் ந.சேகர், ஒன்றியக் குழு உறுப்பினர் சந்திரகாசன், ஊராட்சி மன்றத் தலைவர்கள் கன்னியம்மாள் குமார், கே.கணபதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பண்ணை சாரா கடன்களுக்கு 6 சதவீதம் மட்டுமே வட்டி: இணைப் பதிவாளர் தகவல்**

First Published : 21 Nov 2010 09:02:31 AM IST

காஞ்சிபுரம், நவ. 20: காஞ்சிபுரத்தில் பண்ணை சாரா கடன்களுக்கான வட்டியை 12 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைத்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இச் சலுகை 31-12-2011 வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளது என்று கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் செந்தில்குமார் தெரிவித்தார்.

÷இது குறித்து அவர் நிருபர்களுக்கு சனிக்கிழமை அளித்த பேட்டி:

÷காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயத்துக்கு தேவையான ரசாயன உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு வருகிறது. விவசாயத்துக்காக நகைக் கடன் ரூ.506 கோடி அளவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 959 விவசாய கூட்டு பொறுப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக் குழுக்களுக்கு ரூ.10 ஆயிரம் சுழல்நிதி வழங்கப்படுகிறது.

÷இம் மாவட்டத்தில் தொன்னாடு, திருக்கழுகுன்றம், திருப்புலிவனம், தாமல் மற்றும் ராஜகுளம் ஆகிய 5 இடங்களில் விவசாய மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களின் மண் பரிசோதனை செய்தல், நீர் பரிசோதனை செய்தல், விவசாய உபகரணங்கள் வழங்குதல், உரம் மற்றும் பூச்சி மருந்து விநியோகம், விவசாயிகளுக்கான ஆலோசனைகளை இம் மருந்தகங்கள் வழங்கி வருகின்றன.

÷மேலும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பொது சேவை மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இப் பொதுச் சேவை மையங்கள் புள்ளலூர், மதுரமங்கலம், குழிப்பாந்தண்டலம், ஜமீன்பாண்டுர், கூவத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் லாடகரணை, எண்டத்தூர் உழவர் பணிக் கூட்டுறவு சங்கம் ஆகிய இடங்களில் பொது சேவை மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் தேவரியம்பாக்கம், வில்லியம்பாக்கம், இள்ளலூர், இந்தளூர், நெசப்பாக்கம் ஆகிய 6 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் பொது சேவை மையம் தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

÷பண்ணை சாரா கடனாக 1168 பேருக்கு ரூ.12.33 கோடி வழங்கப்பட்டுள்ளது. பண்ணைசாரா கடன் பெற்ற உறுப்பினர்கள் 31-3-2007 அன்று முழுமையாக தவணை தவறி நிலுவையிலுள்ள கடனுக்கான வட்டியை 12 சதவீதத்தில் இருந்து 6 சதவீதமாக குறைத்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது. இச் சலுகை டிசம்பர் 31 2011-ம் ஆண்டு முடிய நீட்டிக்கப்பட்டுள்ளது என்றார்.

**கரும்பு டன்னுக்கு ரூ. 2500 வழங்க வலியுறுத்தல்**

First Published : 20 Nov 2010 11:40:01 AM IST

அரியலூர், நவ. 19: அரியலூரில் கரும்பு டன்னுக்கு ரூ. 2500 வழங்க வேண்டும் என கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அரியலூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கோத்தாரி சர்க்கரை ஆலை கரும்பு உற்பத்தியாளர்கள் சங்க செயற்குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்துக்கு வாரணவாசி ராஜேந்திரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

விவசாயப் பணிக்கு ஆள்கள் பற்றாக்குறை, வெட்டுக்கூலி, உரம் உள்பட அனைத்து உற்பத்திச் செலவுகளும் உயர்ந்து விட்ட நிலையில், 2010-11 ஆம் ஆண்டு அரவைப் பருவத்துக்கு, தமிழக அரசு அறிவித்துள்ள கரும்பு டன்னுக்கு ரூ. 1900 என்பது மிகவும் குறைவாக உள்ளது. எனவே, விவசாயச் சங்கங்களின் நலனைக் கருதி வெட்டுக்கூலி, வாகன வாடகை இன்றி கரும்பு டன் ஒன்றுக்கு ரூ. 2500 அறிவிக்க வேண்டும்.

டீசல் விலையைக் கருத்தில் கொண்டு, டிராக்டர் உரிமையாளர்களும் கரும்பு உற்பத்தியாளர்கள் என்பதால் வாகன வாடகையை உயர்த்தி வழங்க வேண்டும்.

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு கரும்பு வெட்டிய 1 வார காலத்திற்குள் பணம் அளிக்கப்பட்டதை போல, நிகழாண்டும் கரும்பு வெட்டிய 1 வார காலத்துக்குள் பணம் அளிக்க வேண்டும். வெளி ஆலைகளில் இருந்து கரும்பு பெறப்படுவதால், பதிவு செய்யப்பட்ட கரும்பு வெட்டுவதில் காலதாமதத்தை குறைக்க, வெளியில் இருந்து கரும்பு பெறக்கூடாது. மேலும், பதிவு செய்யப்பட்ட கரும்பை 10 மாதங்கள் முதிர்ச்சி அடைந்தவுடன் வெட்ட வேண்டும்.

கடந்த 2002-03, 2003-04 ஆம் ஆண்டுகளில், நிலுவையில் உள்ள பாக்கித் தொகை ரூ. 3 கோடியை விவசாயிகளுக்கு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

கரும்பு ஆலையில், இணைப்புச் சாலைகள் சீரமைக்காமல் உள்ளது. எனவே, கரும்பு அபிவிருத்தி சாலைகளை ஆலை நிர்வாகம் சீரமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் நிர்வாகிகள் விஜயகுமார், முருகானந்தம், பன்னீர்செல்வம், நல்லியப்பன், அறிவழகன், அய்யாரப்பன், சுந்தரமூர்த்தி, வில்வநாதன், ராஜாசிதம்பரம், ஏசுதாஸ், மணி, துரைராஜ், பிச்சைபிள்ளை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

**மஞ்சள் விலை ஏறுமுகம் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2010,01:51 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் குவிண்டால் 15 ஆயிரத்து 681 ரூபாய்க்கு விற்றது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாள்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த மஞ்சள் ஏலத்துக்கு ஆத்தூர், கெங்கவல்லி, தலைவாசல், தம்மம்பட்டி மற்றும் கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, சின்னசேலம், பெரம்பலூர், கடலூர் ஆகிய பகுதியை சேர்ந்த விவசாயிகள் விளைவித்த மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் 20ம் தேதி இரவு நடந்த ஏலத்தில் விரலி மஞ்சள் அதிகபட்சமாக 15 ஆயிரத்து 681 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக 13 ஆயிரத்து 989 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் அதிகபட்சம் 15 ஆயிரத்து 69 ரூபாய்க்கும், குறைந்தபட்சம் 13 ஆயிரத்து 719 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் அதிகபட்சம் 14 ஆயிரத்து 889 ரூபாய்க்கும், குறைந்த பட்சம் 12 ஆயிரம் ரூபாய்க்கும் விற்றது. மஞ்சள் ஏலத்தில் 350 மூட்டைகள் (300 குவிண்டால்) 37 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தை விட விரலி குவிண்டாலுக்கு 377 ரூபாய், உருண்டை 578 ரூபாய், பனங்காலி 1,912 ரூபாய் விலை அதிகரித்துள்ளது. இரண்டு வாரங்களாக விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில் விலை ஏறுமுகமாக உள்ளதால் மஞ்சள் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மீன்பிடி தொழில் பாதிப்பு கேரள மீன்களுக்கு கிராக்கி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2010,01:20 IST

கிள்ளை : சிதம்பரம் அருகே முடசல் ஓடை சுற்றுப்பகுதி மீனவர்கள் கடந்த சில தினங்களாக மீன்பிடி தொழிலுக்குச் செல்லாததால் கேரளாவில் இருந்து விற்பனைக்கு வந்துள்ள மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடலூர் மாவட்டம் சிதம்பரம் அருகே முடசல் ஓடை சுற்றுப் பகுதியில் உள்ள 20க்கும் மேற்பட்ட கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். கடல் அலை வழக்கத்தை விட அதிகரித்துள்ளதாலும், இரவு நேரத்தில் பலத்த இடியுடன் கூடிய மழை மற்றும் காற்று வீசுவதால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாமல் தங்கள் படகுகளை பாதுகாப்பு கருதி முடசல் ஓடையில் நிறுத்தி வைத்துள்ளனர்.

முடசல்ஓடை கடற்கரை பகுதியில் இருந்து சிதம்பரம் மீன் மார்க்கெட் பகுதிக்கு விற்பனைக்கு மீன்களை கொண்டு சென்ற நிலை மாறி, தற்போது கேரள மீன்கள் விற்பனைக்கு வருகின்றன. இதனால், சிதம்பரம் மார்க்கெட்டில் மீன்களை கொள்முதல் செய்து வியாபாரிகள் கடற்கரையோரம் உள்ள கிராமங்களில் விற்பனை செய்வதால் விலை அதிகரித்துள்ளது.

**நிலக்கடலை சாகுபடி குறித்து பண்ணைப்பள்ளி துவக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2010,01:15 IST

குளித்தலை: புழுதேரி வேளாண் அறிவியல் மையம் மற்றும் வேளாண் துறை சார்பில், "ஆத்மா' திட்டத்தின் கீழ் "நிலக்கடலை பயிரில் ஒருங்கிணைந்த சாகுபடி முறைகள்' என்ற தலைப்பில் பண்ணைப்பள்ளி துவக்கவிழா, கடவூர், சீத்தப்பட்டியில் நடந்தது. வேளாண் இணை இயக்குனர் சவுந்திரம் தலைமை வகித்தார். கடவூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் (பொ) வேல்முருகன் பேசுகையில், "நிலக்கடலை பயிர் சாகுபடியில் ஒருங்கிணைந்த சாகுபடி முறைகளை விவசாயிகள் கடைபிடிப்பதன் மூலம் அதி லாபம் பெற முடியும்,' என்றார்.

இப்பண்ணை வாரத்துக்கு ஒருநாள் என ஆறு வாரம் நடக்கும். விவசாயிகள் நிலக்கடலை சாகுபடியில் விதைப்புக்கு முன் கடைபிடிக்க வேண்டிய முறைகள் முதல் அறுவடைக்கு பின் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை செயல்முறை விளக்கத்துடன் தெரிந்து கொள்ளலாம். தேவர்மலை சீத்தப்பட்டி கிராமத்தில் ஆர்வமுள்ள விவசாயிகள் 30பேர் தேர்வு செய்யப்பட்டு வேளாண் அறிவியல் மையம் இப்பண்ணைப் பள்ளியை நடத்த திட்டமிட்டுள்ளது. முன்னதாக தொழில்நுட்ப வல்லுனர் விஜய் வரவேற்றார். விவசாயி பிச்சை நன்றி கூறினார்.

**நெல்லில் இலை மடக்குப் புழுவை கட்டுப்படுத்த வேளாண் விஞ்ஞானி அட்வைஸ்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2010,00:51 IST

செய்துங்கநல்லூர் : நெல்லில் இலை மடக்குப்புழு நோயை கட்டுப்படுத்தும் வழிமுறைகளை வேளாண் விஞ்ஞானி தெரிவித்துள்ளார். இந்த சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்துள்ளதில் நெல்லில் இலை மடக்குப்புழு நோய் வர வாய்ப்புள்ளது. இந்த நோய் மழைக்குப் பின்னர் வெயிலடிக்கும்போது ஏற்படும் மற்றும் தழைச்சத்து கொண்ட உரங்களை இட்டதும் தோன்றும். அதே நேரத்தில் நிழலான பகுதி மிகுந்து இருந்தாலும் இந்நோய் காணப்படும். தொழு உரம் இடுமுன் குவித்து வைத்த மற்றும் தழைச்சத்து கொண்ட உரங்கள் அதிகம் விழுந்த இடங்களில் முதலில் தோன்றும்.

இந்த நோய் வந்த பயிர்களில் பொன் மஞ்சள் நிற அந்துகள் வயலினுள் பறந்து இலைகளின் பின்புறம் அமரும், இலைகள் வெண்ணிறமாக அரிக்கப்பட்டு சுருட்டப்படுகின்றன, பயிர் வெளுத்துப் புகைந்தது போல் காணப்படும்.

இந்நோயினால் பொருளாதார சேத துவக்க நிலை 10 சதம் இலைகளில் ஏற்படும். இந்நோயினால் தீவிர பாதிப்பு ஏற்பட்டால் அதிக சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது. இந்நோய் வந்தபின் கட்டுப்படுத்த மானோகுரோட்டோபாஸ் ஏக்கருக்கு 400 மில்லி அல்லது குளோர்பைரிபாஸ் ஏக்கருக்கு 500 மில்லி மருந்தினை பயிர் முழுவதும் படும்படியாக மாலை நேரம் தெளிக்க வேண்டும். மருந்துக் கரைசல் இலைகளில் நன்கு படிய சாண்டோவிட், இன்ட்ரான், பைட்டோவெட், ஸ்டிக்கால் போன்ற திரவ சோப்புகளில் ஒன்றினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு கால் மில்லி வீதம் சேர்த்து கலக்கி தெளிக்க வேண்டும். இவ்வாறு திருவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

**தண்டு துளைப்பான் தடுக்க செயல்விளக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 22,2010,01:08 IST

மோகனூர்: "கத்திரியில் காய் மற்றும் தண்டு துளைப்பான் நோய்களை இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து கட்டுப்படுத்துவது பற்றி செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. கத்திரி சாகுபடி செய்யும் பகுதியில தண்டு துளைப்பான் மிகப்பெரும் சேதத்தை உண்டாக்கும் பூச்சியாக உள்ளது. புழு செடியின் நுனிக்குருத்து உள்ளே சென்று செடியின் மற்ற பாகங்களுக்கு செல்லும் தண்ணீர் கடத்தும் திசுக்களையும், காயையும் சேதப்படுத்தியும் விடுகிறது. அதனால், விவசாயிகள் மகசூல் இழப்பு பெரிய அளவில் ஏற்படுகிறது. அதைக் கட்டுப்படுத்த விவசாயிகள் அதிகமான அளவில் ஊடுருவிப் பாயும் பயிர் பாதுகாப்பு மருந்துகளை தெளித்து வருகின்றனர்.

அதனால் கத்திரிக்காய்களில் எஞ்சிய நஞ்சு மனிதர்களுக்கு தீங்கை ஏற்படுத்துகிறது. மண் வளம் கெடுவதுடன், சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகிறது. கத்திரியில் காய் மற்றும் தண்டு துளைப்பானை கட்டுப்படுத்த உயிரிய பயிர் பாதுகாப்பு சாதனமாக இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து பயிரை பாதுகாக்க வேண்டும். கத்திரி நாற்று நடவு செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் ஏக்கருக்கு 12 முதல் 16 இனக்கவர்ச்சி பொறிகள் வைக்க வேண்டும். ஆண் அந்துப்பூச்சிகளை கவர்வதற்காக ஒரு குப்பியில் பெண் அந்துப்பூச்சியின் வாசனையுள்ள திரவம் நிரப்பி வைக்கப்பட்டிருக்கும்.

பொறியினுள் இறந்து கிடக்கும் ஆண் அந்துப்பூச்சிகளை வாரம் ஒரு முறை தண்ணீருடன் கீழே கொட்டி புதிய எண்ணெய் கலந்த தண்ணீரை நிரப்பி வைக்க வேண்டும். இரண்டு மாதத்துக்கு ஒரு முறை திரவம் நிரப்பிய குப்பியை புதியதாக விலைக்கு வாங்கி வைக்க வேண்டும். ஒரு குப்பியின்

விலை 15 ரூபாய். மருந்து தெளிக்காமல் இனக்கவர்ச்சி பொறிகள் வைத்து கத்திரியில் காய் மற்றும் தண்டு துளைப்பானை கட்டுப்படுத்தி குறைந்த வரும் கத்திரி சாகுபடியை அதிகரிக்க வேண்டும். கத்திரியை தாக்கும் தண்டு துளைப்பானை கட்டுப்படுத்தும் வகையில், ஆத்மா திட்டத்தின் கீழ், மோகனூர் யூனியன் மூங்கில்பட்டியை சேர்ந்த விவசாயி கணேசன் என்பவர் தோட்டத்தில் இனக்கவர்ச்சி பொறி செயல் விளக்கத்திடல் அமைத்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

மோகனூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். பெஸ்ட் கன்ட்ரோல் நிறுவன விற்பனை மேலாளர் பாஸ்கர், இனக்கவர்ச்சி பொறிகள் வைக்கும் முறை பற்றியும், அதனால் விவசாயிகளுக்கு கிடைக்கும்  பயன்கள் குறித்தும் விளக்கினார். நிகழ்ச்சியில் வேளாண் அலுவலர் சுதா, துணை தோட்டக்கலை அலுவலர் ராமசாமி, உதவி வேளாண் அலுவலர்கள் மணி, கார்த்திக், சுரேஷ், மோகன்ராஜ் மற்றும் விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாய நிலங்கள் அழிவதை தடுக்க கடுமையான சட்டம் இயற்ற கோரிக்கை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,23:46 IST

திருநெல்வேலி : விவசாய நிலங்கள் அழிவதை தடுக்க கடுமையான சட்டத்தை அரசு கொண்டு வரவேண்டும் என பாளை.யில் நடந்த ஒசார்ட் தொண்டு நிறுவன கருத்தரங்கில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒசார்ட் தொண்டு நிறுவனத்தின் ஆண்டு திட்ட கருத்தரங்கம் பாளை. ரெட்டியார்பட்டி அலுவலகத்தில் நடந்தது.  கருத்தரங்கிற்கு செயலாளர் ஜெபாஸ்டின் செல்வகுமார் தலைமை வகித்தார். ஒருங்கிணைப்பாளர் சுப்பிரமணியன் வரவேற்றார். நவஜீவன் டிரஸ்ட் இயக்குநர் நளன், சவேரியார் ஆலய பங்கு தந்தை அந்தோணி குரூஸ், ஒசார்ட் புரவலர்கள் சம்பத், ராஜாதனசிங், செபஸ்டின், குறிச்சி நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் கணேசன், நாராயணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதில் இயற்கை உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும். விவசாய நிலங்கள் அழிக்கப்படுவதை தடுக்கவும், நீராதாரங்களை ஆக்கிரமிப்பதை தடுக்கவும் கடுமையான சட்டம் கொண்டு வர வேண்டும். மணல் திருட்டை தடுக்க வேண்டும். நீரினை பயன்படுத்துவோர் சங்கம், விவசாயிகள் சங்கங்களுக்கு கால்வாய், குளம் மராமத்து பணியை மேற்கொள்ள அதிகாரம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஒசார்ட் துணை தலைவர் ஆரோக்கியம் நன்றி கூறினார்

பருத்தியில் மாவு பூச்சி கட்டுப்படுத்தி அதிக மகசூல்

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,01:43 IST

பெரம்பலூர்: "பருத்தியில் மாவுப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தும் முறைகளை கடைபிடித்து அதிக மகசூல் பெற்று பயன்பெறலாம்' என பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ரெகுநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் இந்த ஆண்டு மானாவாரி பருவத்தில் 18 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் பருத்தி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்சமயம் வளர்ச்சி மற்றும் காய்ப்பருவத்தில் பயிர்களின் நிலை உள்ளது. பருத்தி பயிரில் மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் மாவுப்பூச்சியின் தாக்குதல் தென்படுகிறது. இளம் உயிரினம் மற்றும் வளர்ந்த பூச்சிகள் இலை, காம்பு, காய், கனு, இடைப்பகுதிகளில் இருந்து சாற்றினை உறிஞ்சுகின்றன. மாவு பூச்சி தாக்கப்பட்ட செடிகள் வளர்ச்சி குன்றி சிறு சிறு செடிகளாக இருக்கும். மாவுப்பூச்சி தாக்கிய செடிகளிலிருந்து தேன் போன்ற திரவம் சுரப்பதால் இலையின் மேல் கரும்படலம் தோற்றுவிக்கப்பட்டு ஒளிச்சேர்க்கை தடுக்கப்படுகிறது.

இதனால், மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். மாவு பூச்சியினால் பாதிக்கப்பட்ட வயலில் எறும்புகளின் நடமாட்டம் அதிகமாக இருக்கும். பருத்தி வயலை தொடர்ந்து கண்காணித்து களை செடிகளை அழிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பருத்தி செடிகள் மற்றும் களைப்பயிர்களை பிடுங்கி அழிக்க வேண்டும். மாவு பூச்சி ஆரம்ப கட்ட பாதிப்பாக இருக்கும் பட்சத்தில் இரண்டு, மூன்று முறை கைத்தெளிப்பான் மூலம் தண்ணீரை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம். ரசாயண பூச்சிக்கொல்லி மருந்துகளான குளோரிபைரிபாஸ் 20 சதவீதம் ஈசி ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி என்ற அளவிலும் அல்லது புரபனோபாஸ் 50 சதவீதம் ஈசி ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றினை, ஒட்டும் திரவத்துடன் கலந்து தெளித்து மாவு பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம்.

ஒன்றுக்கு மேற்பட்ட பூச்சிக்கொல்லி மருந்தினை சேர்த்து தெளிப்பதையும், ஒரே பூச்சி மருந்தினை திரும்ப திரும்ப பயன்படுத்துவதையும் தவிர்க்கவேண்டும். பருத்தி விவசாயிகள் அனைவரும் பயிர் பாதுகாப்பு முறையினை கடைபிடித்து மாவுப்பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும்

**காய்கறிகள் விலை உயர்வு: நடுத்தர மக்கள் கலக்கம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,02:10 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக காய்கறிகள் விலை அதிகரித்துள்ளதால், நடுத்தர மக்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில் உணவு தானியங்களுக்கு அடுத்தப்படியாக காய்கறிகள் அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் காய்கறிகள் உள்ளூர் தேவைகள் போக வெளி மாவட்டங்களுக்கும் விற்பனைக்கு செல்கிறது. கடந்த 29ம் தேதி முதல் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மாவட்டத்தில் காய்கறி உற்பத்தி பெரும் அளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தென்னையை தாக்கும் ஈரியோஃபைட் நோய் காரணமாகவும், கடந்த சில மாதங்களாக நிலவிய வறட்சி காரணமாக தேங்காய் உற்பத்தி அதிகம் பாதிப்படைந்துள்ளது.

கடந்த மாதங்களில் மூன்று தேங்காய் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட நிலை மாறி தற்போது, ஒரு தேங்காய் 6 ரூபாய் முதல் 8 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. உள்ளூர் காய்கறிகளின் விலை கடந்த மாதங்கள் கிலோவுக்கு 6 ரூபாய் முதல் 8 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, கோஸ், கத்தரிக்காய், வெண்டை, அவரை, புடலை உள்ளிட்ட காய்கறிகள் கிலோ 12 முதல் 15 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த மாதம் வரையில் கிலோ 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம் தற்போது 30 ரூபாய் முதல் 35 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. கேரட், பீன்ஸ், பீட்ரூட் உள்ளிட்ட ஆங்கில வகை காய்கறிகள் கடந்த மாதங்களில் கிலோ 12 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது 26 ரூபாய் முதல் 34 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

காலிஃப்ளவர் ஒரு பெரிய பூ கடந்த மாதங்களில் 5 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, ஒரு பூ 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கொத்தமல்லி கட்டு 10 ரூபாய் முதல் 15 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அதே நேரம் புதினா கட்டு 2 ரூபாய் முதல் 3 ரூபாய் வரையில் விற்பபனை செய்யப்படுகிறது. தக்காளி உற்பத்தி அதிகரிப்பு மற்றும் காய்களில் மழைக்கு கரும்புள்ளி, வெட்டுக்கள் விழுந்து வருவதால், தக்காளி விலை தொடர்ந்து கிலோ 5 முதல் 6 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தர்மபுரி உழவர் சந்தையில் வாடிக்கையாளர்கள் கூட்டம் அதிகம் இருந்த போதும் காய்கறிகள் விலை உயர்வால் விற்பனை மந்தமாகியுள்ளது. நடுத்தர மக்கள் குறைந்த விலை காய்கறிகளை வாங்கி செல்கின்றனர்.

தீபாவளி பண்டிகையொட்டி காய்கறிகள் விலை குறைந்திருந்த நிலையில் தற்போது விலை உயர்வடைந்திருப்பது நடுத்தர மக்களுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

**கார்த்திகைபட்ட பயிர்களுக்கு என்ன விலை?ஆய்வு மையம் தகவல்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,23:22 IST

கோவை: கார்த்திகைபட்டத்தில் பயிரிடப்படும் கொத்தமல்லி, கொண்டைக்கடலை, கம்புக்கு என்ன விலை கிடைக்கும் என்ற தகவலை கோவை வேளாண் பல்கலை வெளியிட்டுள்ளது.வேளாண் பல்கலை அறிக்கை: தமிழகத்தில் கொண்டைக்கடலை, கொத்தமல்லி, கம்பு ஆகியவை கார்த்திகைப்பட்டத்துக்கான (அக்டோபர் - நவம்பர் விதைப்பு) மூன்று முக்கிய பயிர்கள். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை போதுமான அளவு பெய்யும் என்ற நம்பிக்கையுடன் முக்கிய பயிர்களை பயிரிட விவசாயிகள் ஆர்வமுடன் உள்ளனர். மேற்கண்ட மூன்று பயிர்களுக்கும் நல்ல விலை கிடைக்குமா என அறியும் ஆர்வமுடன் உள்ள விவசாயிகளுக்கு உதவும் வகையில், கோவை வேளாண் பல்கலையில் இயங்கி வரும் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் விலை முன்னறிவிப்பு செய்கிறது. கொண்டைக்கடலை: இதன் உற்பத்தியில் இந்தியா முதலிடம் வகிக்கிறது. உலக உற்பத்தியில் 90 சதவீதத்தை இந்தியாவே பயன்படுத்துகிறது.

தமிழகத்தில் நவம்பரில் பயிரிடப்பட்டு பிப்ரவரி அல்லது மார்ச்சில் அறுவடை செய்யப்படுகிறது. சென்ற ஆண்டு 0.45 மில்லியன் "டன்' அறுவடை நடந்தது. கொண்டைக்கடலை பயிரிடுவதில் கோவை மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. வர்த்தக தகவலின்படி, இறக்குமதி மற்றும் உள்நாட்டு வரத்துகளால் பிப்., மற்றும் மார்ச் மாதங்களில் இதன் விலை நிலையாக இருக்கும். தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் மற்றும் உடுமலை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள கொண்டைக்கடலை விலைகளை ஆய்வு செய்ததில், பிப்., மற்றும் மார்ச் 2011ல் கொண்டைக்கடலை விலை குவிண்டாலுக்கு 2,400 - 2,500 ரூபாயாக இருக்கும்.

கொத்தமல்லி: இந்தியாவில் 2009ல் 3.62 லட்சம் எக்டரில் கொத்தமல்லி பயிரிடப்பட்டு, 2.88 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. தமிழகத்தில் 24,748 எக்டரில் பயிரிடப்படுகிறது. கோவை, விருதுநகர், தூத்துக்குடி, கடலூர் மாவட்டங்களில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. பல்கலையின் சந்தை தகவல் மைய ஆய்வின்படி, பிப்ரவரி-மார்ச் 2011ல் அறுவடையின்போது கொத்தமல்லியின் விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாய் முதல் 3,200 ரூபாய் வரை இருக்கும்.

கம்பு: தமிழகத்தில் அதிகமாக பயிரிடப்படுகிறது. வறட்சியான நிலைகளிலும் வளரும் தன்மை கொண்டது. கடந்த 2008 - 09ல் 9.71 மில்லியன் எக்டர் நிலத்தில் விளைவிக்கப்பட்டு, 8.88 மில்லியன் "டன்' உற்பத்தி செய்யப்பட்டது. வடகிழக்கு பருவ மழையை பொறுத்து தென் தமிழகத்தில் அதிகமாக பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் கடந்த ஆண்டில் 0.59 லட்சம் எக்டரில் பயிரிடப்பட்டது. இதில், 0.85 லட்சம் டன் உற்பத்தி செய்யப்பட்டது. அதிகபட்சமாக விழுப்புரம் மாவட்டத்தில் 15,172 எக்டரில் பயிரிடப்படுகிறது.

கடந்த ஜனவரியில் அறுவடை சமயத்தில் இதன் விலை கிலோவுக்கு எட்டு ரூபாய் ஆக இருந்தது. வர்த்தக தகவல்களின்படி, கம்பு பயிர் செய்யும் விவசாயிகள், விவசாயக் கூலி அதிகம் காரணமாக மக்காச்சோளப் பயிர் சாகுபடிக்கு மாறியுள்ளனர். இதன் காரணமாக இந்த ஆண்டு கம்பு சாகுபடிப் பரப்பு குறைய வாய்ப்புள்ளது. பல்கலையின் சந்தை தகவல் மைய ஆய்வின்படி, பிப்ரவரி - மார்ச் 2011ல் ஒரு குவிண்டாலுக்கு 750 - 875 ரூபாய் விலை கிடைக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு, வேளாண் பல்கலை தெரிவித்துள்ளது.

**பயிர் மகசூல் பெருக்கும் இயற்கை வளர்ச்சி ஊக்கிகள்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,23:26 IST

கோவை: பயிர்களில் அதிக விளைச்சல் மற்றும் லாபம் தரும், இருவகை இயற்கை வளர்ச்சி ஊக்கி மருந்துகளின்அறிமுக விழா கோவை வேளாண் பல்கலையில் நேற்று நடந்தது. வேளாண் பல்கலையின் விதை மையமும் "கொச்சி நீட்டா ஜெலாடின்' நிறுவனமும் இணைந்து "சீட் எய்டு' மற்றும் "நியூட்ரிகோல்டு' ஆகிய பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்துகளை தயாரித்துள்ளன. இதற்கான ஆராய்ச்சி, கோவை வேளாண் பல்கலை விதை மையத்தில் நடந்து வந்தது. இது குறித்து கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேசபூபதி கூறியதாவது: விதைகளின் வீரியத்தை பொறுத்துதான் விவசாயிகளின் முயற்சிகளுக்கு பலன் கிடைக்கும்.

விதை உற்பத்தியை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகள் பல கோடி ரூபாய் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. விதை நேர்த்தி, விதை தரம் கண்டறிதல், விதை சுத்திகரிப்பு, விதை உற்பத்தி போன்ற விதை சார்ந்த அனைத்து துறைகளிலும் ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. இதனால், இந்திய விதை ஆராய்ச்சிக்கே பல்கலையின் இத்துறை ஒரு முன்னோடியாக உள்ளது.கடந்த 2007 -09 வரை நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் விதை உற்பத்தியாளர்கள், விதை நிறுவனங்கள், விவசாயிகளுக்கு நல்ல பலன் கிடைத்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகளான "சீட் எய்ட்' மற்றும் "நியூட்ரிகோல்ட்' ஆகியவை, கடந்த

ஓராண்டாக பல மாவட்ட வயல்களில் சோதனை செய்து பார்த்ததில் திருப்தியான முடிவுகள் கிடைத்துள்ளன.

வேளாண் விரிவாக்க அலுவலர்கள் மூலம் விவசாயிகளுக்கு இவற்றை கொண்டு சேர்க்க வேண்டும். இன்று சான்றளிக்கப்பட்ட விதைகள் குறைவாக உள்ளன. பருத்தியில் 90 சதவீதமும், அரிசியில் 60-70 சதவீதமும் சான்றளிக்கப்பட்ட விதைகள் உள்ளன. பயறு மற்றும் எண்ணெய் வித்துக்களில் 10-15 சதவீத சான்றளிக்கப்பட்ட விதைகளே உள்ளன. புரதச்சத்து பற்றாக்குறை தமிழகத்தில் அதிகம். இதனால் ஊட்டச்சத்து போதுமான அளவில் கிடைப்பதில்லை. பயறு மற்றும் எண்ணெய் வித்துகளுக்கான சான்றளிக்கப்பட்ட விதை சதவீதத்தை மேம்படுத்த, விதை அறிவியல் துறை அதிக கவனம் செலுத்த வேண்டும். இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார்.

ஆராய்ச்சி மேற்கொண்ட விதை அறிவியல் துறை பேராசிரியர்கள் உமாராணி, பொன்னுசாமி, ஜெர்லீன் ஆகியோர் கூறுகையில், ""இந்த இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகளை பயன்படுத்துவதால் விதையின் வீரியம் அதிகரிக்கும். செடியில் அதிக பூக்கள் பூக்கும். இதனால் 20 சதவீதம் மகசூல் பெருகும். காய்கறிகளின் உற்பத்தியும் அளவும் பெரிதாக இருக்கும். பருத்தி, அரிசி,மக்காச்சோளம் உற்பத்தியில் நடத்திய ஆராய்ச்சி சிறந்த பலன் தந்துள்ளது. "நியூட்ரிகோல்டு' மருந்தை ஒரு ஏக்கருக்கு அரை லிட்டர் பயன்படுத்த வேண்டும். மாட்டு எலும்பின் உள்பகுதியில் உள்ள டைகால்சியம் பாஸ்பேட் மற்றும் ஜெலட்டின் ஆகியவற்றை நீக்கியபின் மீதமுள்ள கழிவுகளை பயன்படுத்தி, பயிர் வளர்ச்சி ஊக்கி தயாரிக்கப்படுகிறது. தற்போது சந்தையில் உள்ள செயற்கை மருந்துகளைப் போல் அல்லாமல், இந்த பயிர் வளர்ச்சி ஊக்கிகள் 100 சதவீத இயற்கை மருந்துகள் என்பதால் விவசாயிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன," என்றார். விழாவில் பல்கலை ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

**கத்தரி விளைச்சல் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,22:16 IST

திருப்பூர்: தொடர் மழையால் காய் கறி பயிரில், அழுகல் நோய், பூச்சி மற்றும் புழு தாக்குதல் ஏற்படும் நிலை உள்ளது. கத்தரிச்செடியின் பூ முற்றிலும் உதிர்ந்து, விளைச்சல் நான்கு மடங்கு குறைந்துள்ளது. மாநிலம் முழுவதும் பரவலாக வடகிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள் ளது. திருப்பூர் மாவட்டத்திலும் நல்ல மழை பெய் கிறது. தொடர் மழை விவசாயிகளுக்கு, மகிழ்ச்சியையும், வருத்தத்தையும் அளித் துள்ளது. கனமழை காரணமாக, நிலத்தடிநீர் மட்டம்

உயர்ந்துள்ளது. தற்போது பயிரிடப்பட்டுள்ள காய் கறி பயிர்களில் பூ உதிர்தல் மற்றும் அழுகல் நோய் ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. வரும் நாட்களில் காய்கறி விலை உயரும் வாய்ப்பு இருக்கிறது. விவசாயிகள் கூறுகையில், "அணை மற்றும் குட் டைகளில் மழைநீர் தேங்கியுள்ளது. இன்னும் ஒரு வாரத்துக்கு கனமழை நீடித் தால், கிணறுகள் நிரம்பி விடும். நிலத்தடி நீர்மட்டம் நன்றாக உயர்ந் துள்ளது. அடுத்த ஆறு மாதத்துக்கு தண்ணீர் பிரச்னை ஏற்படாது. தொடர் மழை காரணமாக, தென்னை மற்றும் வாழை பயிர்களுக்கு நன்மை; வாழைக்கு அதிக நீர்தேக் கம் கூடாது. கத்தரி, தக்காளி, வெண்டை, கொத்தமல்லி, பீட்ரூட் உள்ளிட்ட இதர காய்கறி பயிர் முற்றிலும் பாதிக்கிறது. தினமும் நான்கு சிப்பம் கத்தரி விளைந்த நிலத்தில், ஒரு நாள் இடைவெளியில் ஒரு சிப்பம் மட்டும் மகசூல்; செடியில் உள்ள பூ முற்றிலும் உதிர்ந்து விட்டது. புழு தாக்குதலால், விளைச் சலில் பாதி வீணாகிறது. பூச்சி மற்றும் புழு தாக்குதல் அதிகமாக இருக்கிறது. கிழங்கு வகை மற்றும் காய் கறி பயிர் அழுகல் நிலையில் உள்ளன. ஒரு கிலோ தக்காளி 13 ரூபாய்க்கு விற் கிறது; விரைவில் விலை அதிகரிக்கும். ஒரு கிலோ கத்தரி 40; கொத்தமல்லி 40 ரூபாய் என, விலை உயர்கிறது,' என்றனர்.

**வெங்காய பயிரை காய் அழுகல் நோயிலிருந்து காக்க வழிமுறை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,01:51 IST

தா.பேட்டை: திருச்சி மாவட்டம், தா.பேட்டை வேளாண் தோட்டக்கலை அலுவலர் முருகன் வெளியிட்ட அறிக்கை: தா.பேட்டை வேளாண் கோட்டத்தில் தற்போது வயல்களில் வெங்காயம் நடவு செய்யப்பட்டுள்ள நிலையில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் வெங்காய வயல்களில் மழைநீர் அதிகளவில் தேங்கியுள்ளது. தொடர்ந்து வயல்களில் நிற்கும் தண்ணீரினால் வெங்காய பயிர் காய் அழுகல் நோய் தாக்குதலுக்கு ஆழாகும் வாய்ப்புள்ளது. இந்நோய் தாக்கினால் மகசூல் பெரிதும் பாதிக்கப்பட்டு விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்படும். எனவே, வயல்களில் தேங்கியுள்ள நீரை நன்றாக வடித்து விட்டு சூடோ மோனாஸ், பூளோரசன்ஸ் என்ற பாக்டீரியாவை ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஐந்து கிராம் என்ற அளவில் அல்லது நன்றாக பொடி செய்யப்பட்ட மாட்டு எருவில் கலந்து தூவுவதால் வெங்காய பயிரினை காய் அழுகல் நோயிலிருந்து பாதுகாத்து கொள்ள முடியும். விவரங்கள் பெற விவசாயிகள் வேளாண் தோட்டக்கலை அலுவலர்களை நேரில் சந்தித்து ஆலோசனை பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கொப்பரை விலை தொடர்ந்து ஏறுமுகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,03:02 IST

பொள்ளாச்சி : காங்கேயம் வெளிமார்க்கெட்டில் கொப்பரை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.காங்கேயம் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 51 ரூபாய் முதல் 52.50 ரூபாய் வரை விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,150 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 83 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.விவசாயிகள் பறித்து உரித்த தேங்காய் டன்னுக்கு 15 ஆயிரம் ரூபாய் (பச்சை தேங்காய்), 16 ஆயிரம் ரூபாய் (காய்ந்த தேங்காய்) விலை கிடைத்தது. தோட்டத்தில் பறித்து வைக்கப்பட்டுள்ள தேங்காய் ஒன்றுக்கு 9.25 ரூபாய் விலை கிடைத்தது. வியாபாரிகள் சொந்த பொறுப்பில் பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 8.50 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறியதாவது:தீபாவளி பண்டிகைக்கு பிறகு கடந்த இரண்டு வாரமாக கொப்பரை மார்க்கெட் சூடுபிடித்துள்ளது. கடந்த இரண்டு வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை கிலோவுக்கு 3.50 ரூபாயும், தேங்காய் எண்ணெய் டின்னுக்கு 120 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 13 ரூபாயும் விலை உயர்ந்துள்ளது. இதனால் தென்னந்தோப்புகளில் தேங்காய் கொள்முதல் விலையும் உயர்ந்துள்ளது.இவ்வாறு, கொப்பரை உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

**செம்மேடு ஏரி உபரிநீர் செல்லும் வாய்க்கால் ஆக்கிரமிப்பு: நெல் பயிர்கள் நாசம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,22:41 IST

செஞ்சி : செம்மேடு ஏரியில் இருந்து உபரி நீர் செல் லும் வாய்க்கால் ஆக்கிரமிப்பினால் காணாமல் போனது. ஏரியில் இருந்து வெளியேறும் உபரி நீர் விவசாய நிலங்களில் புகுந்து நூறு ஏக்கர் அளவிற்கு நெல் பயிர்கள் தண்ணீரில் மூழ்கியுள்ளன. செஞ்சி பகுதியில் பெய்து வரும் கனமழை காரணமாக கடந்த சில நாட்களாக நேரடியாக மழை நீர் வரும் ஏரிகள் வேகமாக நிரம்பி வருகின்றன. நேற்று அதிகாலை 3 மணிக்கு செம் மேடு ஏறி நிறைந்து உபரி நீர் வெளியேறி வருகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை 3 மீட்டர் அகலத்தில் 2 கி.மீ., தூரத் திற்கு வாய்க்கால் இருந் துள்ளது. இதன் வழியாக உபரி நீர் அடுத்துள்ள புத் தேரிக்கு சென்றது. இந்த வாய்க் கால்

தற்போது சுமார்100 மீட்டர் அள விற்கு மட்டுமே உள்ளது. அடுத்துள்ள பகுதியில் வாய்க்காலை ஒட்டி இருந்த விவசாயிகள் வாய்க்காலை அழித்து ஆக்கிரமித்துள்ளனர்.
வாய்க்காலின் துவக்கத் திலேயே ஆக்கிரமித்து அழிக்கப்பட்டதால் இதன் தொடர்ச்சியாக வாய்க் கால் அழிக்கப்பட்டதுடன், புதிதாக ஏற்பட் டுள்ள சர்க்கரை ஆலை பகுதியில் இருந்த வாய்க் காலும் அழிக்கப் பட்டது. சில ஆண்டுகளாக குறைவான மழை இருந்ததால் ஏரியில் இருந்து உபரி நீர் அதிகளவில் வெளியேற வில்லை. நேற்று ஏரியில் ஒரே நேரத்தில் அதிக அளவு உபரி நீர் வெளியேறியது. வாய்க்கால் அழிக் கப்பட்டதால் வெள்ளம் மொத்தமும் விவசாய நிலங்களுக்குள் புகுந்தது. இதனால் 100 ஏக்கர் அள விற்கு நெல் பயிர்கள் தண் ணீரில் தத்தளிக்கின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகள் சிலர் நேற்று காலை ஏரிக்கு தண்ணீர் வரும் பிரதான வாய்க்கலின் கன் மாயை உடைத்து தண்ணீரின் ஒரு பகுதியை வராகநதிக்கு திருப்பி விட்டுள்ளனர்.

இருந்தும் விவசாய நிலங்களில் பாய்ந்து வரும் வெள்ளத்தின் அளவு குறையவில்லை. இந்த பயிர் களை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகின்றனர். நேற்று கன்மாயை உடைத்து தண்ணீரை திருப்பி விட்ட போது, எதிர்காலத்தில் ஏரி தண்ணீரும் இதன் வழியாக வெளியேறிவிடும் எனக்கூறி ஒரு பகுதி விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இரு தரப்பினருக்கும் மோதல் ஏற்படும் சூழ் நிலை உருவானது. கிராம முக்கியஸ்தர்கள் சமாதானம் செய்து வைத்தனர். தண்ணீரில் மூழ்கி உள்ள நிலங்களில் இருந்து உடனே தண்ணீர் வடிவதற்கான வாய்ப்பு இல்லை. எனவே வாய்க்காலை ஆக்கிரமித்துள்ளவர்களுக்கும், பாதிக்கப்பட் டுள்ள விவசாயிகளுக்கும் இடையே உள்ளுக்குள் பிரச்னை புகைந்து கொண் டிருக்கிறது. இது விரைவில் மோதலாக வெடிக் கும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. ஆக்கிரமிப்பினால் "காணவில்லை' என விவசாயிகள் சொல் லும் 2 கி.மீ., தூரத்திற்கான வாய்க் காலை கண்டுபிடித்து மீட் டெடுக்க வேண்டும். நீர் ஆதாரத்தை பாதுகாக்க ஆக்கிரமிப்பாளர்கள் மீது வருவாய்த்துறையினர் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்

**வேர்கடலை விதைப்புக்கு தொழில் நுட்ப ஆலோசனை**

பதிவு செய்த நாள் : நவம்பர் 21,2010,22:53 IST

அவலூர்பேட்டை : கார்த்திகை பருவத்தில் வேர்கடலை விதைக்க விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப் பட்டுள்ளது.
மேல்மலையனூர் வேளாண் உதவி இயக்குநர் ஏழுமலை விடுத்துள்ள செய் திக்குறிப்பு:
மேல்மலையனூர் வட் டாரத்தில் மழை பெய்துள் ளதால் விவசாயிகள் வேர்கடலை சாகுபடி

செய்ய  திட்டமிட்டுள்ளனர். நடப்பு கார்த்திகை விதைப் புக்கு திண்டிவனம் 7, ஜெ .எல்., 24, வி.ஆர்.ஐ., 3, ரகங்களை பிரித்தெடுத்து விதைக்கலாம். ஏக்கருக்கு 50 கிலோ விதைகள் பயன் படுத்தலாம்.

இதை 30க்கு 10 செ.மீ.,இடைவெளியில் 5 செ.மீ.,ஆழத்தில் விதைக்கலாம். எக்டருக்கு 200 கிலோ ஜிப்சம் அடியுரமாகவும், இரண்டாம் களையின் போது 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைக்கவும். அடியுரமாக எக்டருக்கு 5 மெட்ரிக் டன் தொழு உரம், ரைசோபியம், பாஸ் போக்டீரிய தலா 2 கிலோ இட வேண்டும். மண் பரிசோதனை செய்ய இயலாத நிலையில் 7:14:21 கிலோ அளவில் தழை, மணி, சாம்பல் சத்து தரும் உரங்களை இடவும். ஏக்கருக்கு 5 கிலோ நுண்ணூட்ட கலவை 15 கிலோ மணலுடன் கலந்து விதைத்தவுடன் மேற்பரப்பில் தூவ வேண்டும். வேர்கடலையில் பூ கொட்டுவதை தவிர்க்கவும், பூக்கள் அனைத்தும் காயாக மாற விதைப்பு செய்த 25 மற்றும் 35 நாட்களில் டி.ஏ.பி., 1கிலோ, அம் மோனியம் சல்பேட் 1கிலோ, போராக்ஸ் 200 கிலோ கொண்ட கல வையை 10 லிட்டர் நீரில் ஊற வைத்து மறுநாள் தெளிந்த நீரை மட்டும் 200 லிட்டர் கலவையாக நீரில் சேர்த்து தெளிக்கலாம்.

**இயற்கை விவசாயத்தைஊக்குவிக்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,21:23 IST

சிவகங்கை:விவசாயிகளிடம் இயற்கை விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க வேண்டும் என, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம்வலியுறுத்தியுள்ளது.மாநில தலைவர் சிவக்குமார் கூறியதாவது: தேவகோட்டை தாலுகாவில், நெற்பயிருக்கு மருந்து அடித்தில், விவசாயிகள் மயக்க நிலையில் சிகிச்சை பெறுகின்றனர். இதில், விவசாயி காளிமுத்து இறந்துவிட்டார். எனவே வெளியில் விற்கும் மருந்துகளை, பரிசோதனை செய்து, அதன் உண்மை தன்மையை அறியவேண்டும். பூச்சி தாக்குதலில் இருந்த நெற்பயிரை காப்பாற்ற எந்தவித மருந்து பயன்படுத்த வேண்டும் என விவசாய துறை ஆலோசனை வழங்கவேண்டும். இதற்கு இயற்கை விவசாய முறை யை ஊக்குவிக்க வேண்டும், என்றார்.

**மழையால் பருப்பு விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 20,2010,21:56 IST

விருதுநகர்:மழை காரணமாக விருதுநகர் மார்க்கெட்டில் பாசிப்பருப்பு, உளுந்தம் பருப்பு விலை உயர்ந்துள்ளது. அரசின் இலவச பொங்கல் பை வழங்கவிருப்பதால் பாசிப்பருப்பு விலை மூடைக்கு 400 ரூபாய் அதிகரித்துள்ளது. பாமாயில் டின்னுக்கு 25 ரூபாய் அதிகரித்துள்ளது.விருதுநகரில் கடலெண்ணெய் கிலோ 75 ரூபாய், சன்பிளவர் கிலோ 75 ஆகவும், 835 ஆக இருந்த பாமாயில் 860 ரூபாயாக உயர்ந்துள்ளது, நிலக்கடலைப் பருப்பு 3,200 ஆகவும், கடலைப்புண்ணாக்கு 2,400 லிருந்து 2,600 ரூபாயாக உயர்ந்துள்ளது.நயம் உளுந்து விலை மூடைக்கு 4,700 ஆகவும், சுமார் ரக உளுந்து 4,300 ஆகவும், பர்மா பருவட்டு உளுந்து 4,200 ஆகவும், பொடி உளுந்து 4,200 லிருந்து 4,300 ரூபாயாகவும் உள்ளது. உளுந்தம் பருப்பு 6,200 லிருந்து 6,300 ஆகவும், பொடி உளுந்தம் பருப்பு 5,700, துவரை 3,600 லிருந்து 3,700, பொடி துவரை 3,000, துவரம் பருப்பு 5,500 லிருந்து 5700, பொடி துவரம் பருப்பு 4,700, பாசிப்பயறு 4,700 லிருந்து 4,800 வரையும், சுமார் ரகம் 4,300 ஆகவும், பாசிப்பருப்பு 5,800, சுமார் ரக பாசிப்பருப்பு 5,400 ரூபாயாகவும் உள்ளது. சர்க்கரை விலை மூடைக்கு 2,985 ரூபாயாக உள்ளது.

மழை காரணமாக மார்க்கெட்டுக்கு பருப்பு வரத்து குறைந்துள்ளது. மேலும் பொங்கலுக்கு அரசு, இலவச பை வழங்கவிருப்பதால் பாசிப்பருப்பு தேவை அதிகரித்து மூடைக்கு 400 ரூபாய் உயர்ந்துள்ளது.மிளகாய் வத்தல் விலை குவிண்டால் 3,000 ரூபாயிலிருந்து 3,250 வரையும், சங்கரன்கோவில் வத்தல் 4,500 லிருந்து 4,750 வரையும், முண்டு வத்தல் 3,500 ஆகவும், பழைய சோடை வத்தல் 2,000 ஆகவும், புது சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும் உள்ளது.

தினத் தந்தி

## அதிக விதை முளைப்புத்திறனுக்கு இயற்கை பயிர் வளர்ச்சி தொழில்நுட்பம் வேளாண் பல்கலைக்கழகம் கண்டுபிடிப்பு



அதிக விதை முளைப்புத்திறன் மற்றும் வளர்ச்சிக்கு பயன் படுத்தப்பட உள்ள இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகளை துணை வேந்தர் முருகேசபூபதி அறிமுகம் செய்த காட்சி.

கோவை,நவ.22–
அதிக விதை முளைப்புத்திறன் மற்றும் பயிர் வளர்ச்சிக்கு, இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகள் நவீன தொழில்நுட்பம் மூலம் வேளாண் பல்கலைக்கழகத்தில் கண்டுபிடிக்கப்பட்டு, அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

### பயிர் வளர்ச்சி ஊக்கிகள்

கேரள மாநிலம் கொச்சியில் உள்ள நிட்டா ஜெலாடின் இந்தியா நிறுவனம் கால்நடைகளின் எலும்புகளில் இருந்து டைகால்சியம் பாஸ்பேட், ஜெலாடின் போன்ற பொருட் களை பிரித்து எடுத்து விற்பனை செய்து வருகிறது. அவ்வாறு பொருட்களை பிரித்து எடுத்த பிறகும் எலும்பின் கழிவில் புரதம், தாது போன்ற சத்துக்கள் உள்ளன. இந்த சத்துக்களை வேளாண்மையில் பயன்படுத்தும் வகையில், கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக விதை மைய பேராசிரியர்கள் உமாராணி, ஜெர்லின், பொன்னுசாமி ஆகியோர் கடந்த 2007 முதல் 2009–ம் ஆண்டுவரை ஆராய்ச்சி மேற்கொண்டு பயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கும் ஊக்கிகளான சீட் எய்ட், நியூட்ரிகோல்டு என்ற இயற்கை வேளாண் பொருட் களை நவீன தொழில்நுட்பம் மூலம் கண்டுபிடித்தனர். 'சீட் எய்டு' என்ற விதை மீது முலாம் பூசும் முறை மூலம் விதைகள் அதிக முளைப்புத்திறன் மற்றும் வீரியம் கொண்டதாகவும், 'நியூட்ரிகோல்ட்' என்ற பயிர்களின் மீது தெளிக்கும் தெளிப்பு மருந்து பயிரின் வளர்ச்சியை அதிகரிப்பதாகவும் கண்டறிந்தனர்.

### அறிமுக விழா

அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பயிர் வளர்ச்சி ஊக்கிகளின் அறிமுகவிழா கோவை வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. விழாவுக்கு கொச்சி, நிட்டா ஜெலாடின் இந்தியா லிமிடெட் நிர்வாக இயக்குனர் சுசீலன் தலைமை தாங்கினார். துணைவேந்தர் முருகேசபூபதி பயிர் வளர்ச்சி ஊக்கிகளை அறிமுகம் செய்து வைத்து பேசினார்.
அப்போது அவர் கூறியதாவது:–
வேளாண் பல்கலைக்கழகத்தில் நிட்டா ஜெலாடின் இந்தியா நிறுவனத்தின் நிதியுதவியுடன் மேற்கொண்ட திட்டத்தின் மூலம் சீட் எய்ட், நியூட்ரிகோல்ட் என்ற இயற்கை பயிர் வளர்ச்சி ஊக்கிகள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது. 2009–ல் இந்த ஆராய்ச்சி நிறைவுபெற்று கடந்த ஓராண்டுகளாக பல்வேறு மாவட்டங்களில் விவசாயிகளின் வயல்களில் இயற்கை பயிர் ஊக்கிகளின் செயல்பாடுகள் குறித்து பரிசோதனை செய்யப்பட்டன.
அதிக மகசூல்
இதன் மூலம் பருத்தி, பழங்கள், நெல், வாசனை பொருட்கள், காய்கறிகள் ஆகியவற்றில் அதிக மகசூல் கிடைத்தது. அதைத்தொடர்ந்து பயிர் ஊக்கிகள் விவசாயிகளின் பயன்பாட்டுக்காக விற்பனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. இந்த ஆராய்ச்சி திட்டத்தை சிறப்பாக செய்து முடித்த பேராசிரியர்களுக்கு என்னுடைய பாராட்டுக்களை தெரிவித்து கொள்கிறேன்.
இவ்வாறு முருகேசபூபதி கூறினார்.
தொடர்ந்து பதிவாளர் சுப்பையன், ஆராய்ச்சி இயக்குனர் பரமாத்மா, தனி அலுவலர் பொன்னுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். முடிவில் நிட்டா ஜெலாடின் இந்தியா நிறுவன நிர்வாகி ஸ்ரீகுமார் நன்றி கூறினார். முன்னதாக விதை மைய தனி அலுவலர் ராமமூர்த்தி வரவேற்றார்.

## கோவை மாவட்டத்தில் 268 மி.மீட்டர் மழை பொள்ளாச்சியில் 79 மி.மீட்டர் பதிவானது

கோவை,நவ.22–
கோவை மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்று ஒரே நாளில் 268 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.
பலத்த மழை
தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தற்போது தொடங்கியுள்ளது. இதைதொடர்ந்து கோவை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. பகல் நேரங்களில் வெயில் அடித்தாலும் மாலை நேரங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை தொடர்ந்து மழை பெய்தது. இதன்காரணமாக கோவை மாவட்டத்தில் ஒரே நாளில் பல்வேறு இடங்களில் பெய்த மழை அளவு 268.70 மி.மீட்டராக பதிவானது.
மழை அளவு
கோவை மாவட்டத்தில் பதிவான மழை அளவு மி.மீட்டரில் வருமாறு:–
பொள்ளாச்சி–79.20 மி.மீட்டர்

*வால்பாறை பி.ஏ.பி.–49*
*வால்பாறை தாலுகா ஆபீஸ்–45*
*சின்னகல்லாறு–40*
*தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகம்–15*
*கோவை தெற்கு–10.10*
*மேட்டுப்பாளையம்–9.30*
*அன்னூர்–9*
*பெரியநாயக்கன்பாளையம்–5*
*கோவை விமான நிலையம்–4.60*
*சின்கோனா–2.50.*

*குளங்கள் நீர்மட்டம் உயருகிறது*

*கோவை மாவட்டத்தில் நேற்று ஒரே நாளில் பெய்த மழையின் மூலம் மொத்தம் 268.70 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது.*

*இது தவிர சோலையார் பகுதியில் 56 மி.மீட்டரும், சிறுவாணி அடிவாரத்தில் 10 மி.மீட்டரும், சிறுவாணி அணை பகுதியில் 15 மி.மீட்டரும், தொண்டாமுத்தூர் பகுதியில் 17 மி.மீட்டர் மழையும் பெய்துள்ளது. கோவை மாவட்டத்தில் பெய்து வரும் பலத்த மழை காரணமாக அணைகள் மற்றும் குளங்களின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.*